

இசைக் கதாப்பிரசங்க முறைமை

இலங்கையில் ஆரம்பத்திலிருந்தே "கதாப்பிரசங்கம்" என்றே அழைக்கப்பட்ட இத்தெய்விகக் கலையே கீர்த்தன் எனப்பட்ட ஹரிகதை அல்லது காலட்சேபம். மராத்தியிலும், தஞ்சை / தமிழ்நாட்டிலும் ஆரம்பிக்கப்பட்ட இசைப்பேருரை முறைமை இலங்கையில் தமிழில் பக்திக்கதை செய்தலுக்கு முக்கியத்துவம் வழங்கியது.

சிவனோ, திருமாலோ "ஹரி" என்ற சொல் தெய்வத்தையே சுட்டுவதால் ஹரிகதாகாலஷேபம் என்ற பொதுப்பெயர் "கதாப்பிரசங்கத்தையே" குறித்தது என்று அறிக.

வரன்முறைப்பட்ட ஹரிகதைக் கலையை ஆற்றுகை செய்யும் முறைமையை தஞ்சை "பட்டி கிருஷ்ண பாகவதர்" தோற்றுவித்தார் என்பதே வரலாறு ஆகும்.

"தமிழகத்திற் கதாகாலட்சேபம்" என்ற நூலை தஞ்சை சாய்முத்துக்குமரன் பதிப்பகத்தில், தஞ்சாவூர் கரந்தைக் கலைக் கல்லூரி தமிழ்வேள் உமாமகேசுவரனார், பேராசிரியர் இரா. குருநாதன் 1988இல் வெளியிட்டுள்ளார்.

"மராட்டிய மன்னர்கள் தஞ்சையை ஆண்டபோது இக்கலை தமிழகம் வந்தது" (பக். 17) என்று கூறும் அவர் "ஒரு நாட்டுக்கலை இன்னொரு நாட்டுக் கலையுடன் இணைகிறதென்றால், இரு கலைகளின் அடிப்படைக் கூறுகள் ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் மராட்டிய மாநிலக் கலையான இக்கதாகாலட்சேபம் தமிழகத்தில் வந்து சிறப்புப் பெற்றது என்றால் அக்கலையின் கூறுகள் தமிழ்நாட்டுக் கலைக்கூறுகளோடு இணைந்தவை என்றேயாகும்" என்பது குருநாதனின் கருத்தாகும்.

மராட்டிய மாநிலத்தில் இந்தக் கலையைக் "கீர்த்தன்" என்று அழைத்தனர். ஆந்திராவில் இதற்கு "ஹரிகதா காலட்சேபமு" என்று பெயர். கர்நாடகத்தில் "கதாப்பிரசங்கம்" என்று பெயர்.

கதாகாலட்சேபம் என்ற சொல் இலங்கையில் மிக அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது எனின், பக்தியுணர்வூட்டுவதையே தன் தலையாய நோக்காகக் கொண்ட இந்த இசை விரிவுரைக்கு "கதாப்பிரசங்கம்" என்ற பெயரே நிலைத்து நிற்கிறது.

இந்தியாவில் தமிழகத்தில் இக்கலையை ஆரம்ப காலத்தில் நிரம்பிய சங்கீத அறிவுடைய வித்வான்களே ஏற்று வெற்றிகரமாக நடத்திவந்தனர். கால ஓட்டத்தில் இக்கலைக்காக அவர்கள் பெரும்பாலும் ஊதியம் பெறுதலை மேற்கொண்டதாகவே இருந்தது. மேலும், புராண, இதிகாச அறிவு மட்டுமல்லாமல் தமிழ் இலக்கண இலக்கிய அறிவை தேடிக்கொள்வதில் ஏற்படக்கூடிய சிரமங்கள் காரணமாக, இசைஞானம் ஓரளவு பெற்ற கல்விச் சான்றோர்களிடத்தே இதனை கையளித்துவிட்டனர் என்றே அறிய முடிகிறது.

இசைப்பிரசங்கம் எனப்படுகிற இக்கலையை மெருகூட்ட வேண்டி பேச்சின் இடையிடையே இசைப்பாடல்களுக்கு அணி செய்ய ஆரம்பத்தில் பிற்பாட்டுக்காரரும் உதவினர். மிருதங்கம், புல்லாங்குழல், சுருதி, வீணை என்பன கட்டாய வாத்தியங்களாக இருந்தன. இசைநயம், கவர்ச்சியும் கருதி வயலின், கஞ்சிரா, மோர்சிங் போன்ற வாத்தியங்கள் கதாபிரசங்கக் கலைக்கு உதவின. இலங்கையில் இந்த அருட்கலை இசையறிந்த, தமிழறிஞர்களினால் போற்றி, பேணி வளர்க்கப்பட்டது. இலங்கை சைவக் கதாகாலட்சேபமெனும், கதாப்பிரசங்கத்துக்கு தனித்துவம் கொடுத்தது.

இலங்கையில் சான்றோர்களால் போற்றப்பட்ட கதாப்பிரசங்க மரபு யாழ்ப்பாணத்திலே மிக நீண்டகாலமாக நிலவிவந்த கதாப்பிரசங்க மரபு இன்று அருகிவிட்டது. ஒரு காலத்தில் கதாப்பிரசங்கத்தை மக்கள் விரும்பிக் கேட்டு இரசித்து வந்தனர். கதாப்பிரசங்கம் என்றால் கதை சொல்லுதல், சம்பாசனை என அகராதிகள் கூறுகின்றன. தமிழ்நாட்டிலே இதனைக் கதாகாலஷேபம் என்றும் சிறுபான்மையாக உபந்நியாசம் என்றும் கூறி அழைக்கின்றனர்.

"கதாகாலஷேபம், உபந்நியாசம், கதாப்பிரசங்கம், புராண பிரசங்கம் ஆகிய பிரயோகங்கள் பெரும்பாலும் ஒரே பொருளிலேயே அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது." உ. வே. சாமிநாத ஐயர் – "என் சரித்திரம்."

உடம்புக்கு உணவும், உணர்வுக்குக் கலையும், அறிவுக்குக் கல்வியும் போல் ஆன்மாவுக்கு வலிவும், பொலிவும் தருவது இறையன்பாகிய பக்தி உணர்வே.

இலங்கையிலே மிகப்பண்டைய நாள்தொட்டே கதாப்பிரசங்கக் கலைக்கான கூறுகள் இருந்திருக்கின்றன. பக்தியுணர்வையே பிரதான நோக்கமாகக் கொண்ட இக்கலைக்கு அடிப்படையாக "புராணபடனம்" செய்தல் என்ற ஒரு வழிபாட்டுக் கலையும் திருமுறைப் பண்ணிசை மரபும்,

மேலாக, புராண, இதிகாச வாசிப்புகளும் இருந்திருக்கின்றன என்பதை இக்கலையின் தோற்றத்தை அணுகி ஆராயுங்கால் புரியமுடிகிறது.

இறையன்பு வளர உள்ளமும், உரையும் இரு கண்களும் கருவிகள் ஆகும். அவற்றுள் உரை உரைப்போர், கேட்போர் ஆகிய இருவர்பாலும் பக்தி உணர்வை விளைவித்துப் பெருக்க வேண்டியே சிவ அருளாளர்களும், நாயன்மார்களும் ஆழ்வார் பெருமக்களும் மறைநெறி சான்ற அறநெறிக் கருத்துகளை அற்புதமான பாடல்களாக அருளினர்.

லோகோபகாரமாக இன்றி, சமயப் பிரசார நோக்கமாக சைவப்பிரசங்கங்கள் பொதுமக்கள் நலன்பெற வேண்டுமென்ற கருத்தைப் பெய்து பிரசங்க நடைக்கு உத்வேகம் கொடுத்த ஸ்ரீலஸ்ரீ நாவலர்; அவர்கள் மேற்போந்த நோக்கத்துக்கே முன்னுரிமை அளித்தவர். அவரும் நன்றாகப் பாடக்கூடியவராக, இசைஞானம் மிகுந்தவராகத் திகழ்ந்து இனிய திருமுறைகளை இடையிடை பாடிப்பாடி இசைத்தவாறே சைவப்பிரசங்கங்களை கோவில்களிலும், பொது மேடைகளிலும் நிகழ்த்தியிருக்கிறார்.

நாவலரின் முதற் பிரசங்கம் இடம்பெற்ற வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலிலேதான் மணி ஐயரின் கதாப்பிரசங்க அரங்கேற்றம் நிகழ்ந்தமை குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது. மிகச்சிறந்த பக்க வாத்தியங்கள் சகிதம் இவர் செய்த கதாப்பிரசங்கங்கள் நினைவை விட்டு அகலாதவை. இலங்கையின் பல பாகங்களிலும் கதாப்பிரசங்கம் செய்த மணி ஐயர் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா முதலான நாடுகளிலும் கதாப்பிரசங்கம் செய்து பெரும்புகழ் ஈட்டியவர்.

மணி ஐயர் எனக் கதாப்பிரசங்க மரபினைத் தொடங்கிய இவர் மணிபாகவதராய் மிளிர்ந்து சி.எஸ்.எஸ்.மணி பாகவதர் என வளர்ந்து, முதலாவது நல்லைக் குருமஹா சந்நிதானமாகி

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளாக ஈழத்துச் சைவத் தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்தார். நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தை நிறுவி அவர் ஆற்றிய பணிகளுக் கெல்லாம் அத்திவாரமாகக் கதாப்பிரசங்க மரபே அமைந்தது எனக் கருதுவது தவறாகாது.

மணி பாகவதரைத் தொடர்ந்து ஈழத்திலே, குறிப்பாக யாழ்ப்பாணத்திலே பலர் சங்கீத கதாப்பிரசங் கத்திலே ஈடுபட்டார்கள். மணி ஐயர் பெற்ற வெற்றியை அவர்கள் பெறா விட்டாலும் ஈழத்துக் கதாப்பிரசங்க மரபுக்கு வலுச் சேர்ப்பவர்களாக விளங்கினார்கள்.



யாழ்ப்பாணத்துக் கதாப்பிரசங்க மரபில் மாத்திரமின்றி இலங்கைக் கதாப்பிரசங்க மரபிலும் மணி ஐயர் என அழைக்கப்பட்ட மணி பாகவதருக்கு அழிக்க முடியாத ஓர் இடமுண்டு எனத் துணிந்து கூறலாம்.

ஆயினும் "சங்கீத கதாப் பிரசங்கம்" என்ற நிலைக்கு அணி செய் பக்கவாத்தியங்களோடு இலங்கையில், ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் பிரசங் கங்கள் செய்ததாக தெரியவில்லை. புராண இதிசாக வரலாறுகளை பக்தி சிலிர்க்க மெய் புளகாங்கிதம் கொள்ளும் வகையில் நாவலர் தம் இனிய பிரசங்கங்களினாலேயே சமயம் வளர்த்தவர் என்ற செய்தி பிரசித்தமானது.

"நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே, சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்து புராணாகமங்க னெங்கேப்ரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை"

என்ற சி.வை.தா.–வின் அற்புதமான பாடலொன்றே நாவலர் பெருமான் போற்றிய பிரசங்கப் பிணியை ஓர்ந்துணரப் போதுமானதாகும்.

இந்தியாவிலும் / தமிழ்நாட்டிலும் அக்காலத்தில் சமய கதாகாலட்சேபம், ஹரிகதைகளுக்காக வித்வான்கள் பணம் வாங்குவதையும், அதை உலோகாயத கருமங்களுக்காக பயன்படுத்தியதையும் அவர் கண்டித்துள்ளார். மாகோமகா உபாத்தியாயர் உ.வே. சாமிநாதய்யரவரது தந்தையார், "கிறிஸ்தவக் கம்பன்" என அழைக்கப்பட்ட ஹெச்.ஏ. கிருஷ்ண சாமி பிள்ளையின் தந்தையார் மற்றும் தமிழ்நாட்டில் இன்னும் சில சங்கீத கதாகாலக்ஷேப அறிஞர்கள், வித்வான்கள் தம் பணிக்காக பொதுமக்களிடம் பணம் பெற்றுக் கொண்டதை உ.வே.சா அவர்களே தம் "என் சரித்திர"த்தில் குறிப்பிட்டுள்ளனர். (அடிக்குறிப்பு 3.)

சில வேளைகளில் கதையைவிட இசை மேலாதிக்கம் பெறுவதுண்டு. கதாப்பிரசங்கம் செய்வோர் சமகால சம்பவங்களையும் கதையோடு இணைத்து உதாரணமாகச் சொல்வதும் உண்டு. இதனாலும் பொதுமக்கள் மத்தியில் இம்மரபுக்குச் செல்வாக்கு வளரலாயிற்று. உலகாயத சம்பந்தமான விடயங்களை இவ்வாறான பக்தியனுபவக் கதைகளில் பயன்படுத்தும்போது மிகக் கவனமாகக் கையாளுதல் அவசியம். வில்லடிப் பாட்டுகளின்போது கிராமிய, நாட்டார் பாடல்கள் சேர்க்கப்படுமிடங்களில் இவை தவிர்க்கமுடியாததாகிவிடினும் சமய கதாப்பிரசங்கங்களில் மேலதிக கட்டுக்கோப்பும், புனிதத்தன்மையும் பேணப்பட வேண்டியது அவசியமாகிறது. உலகாய விடயங்கள் பக்தி

நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பிரசங்கங்களுக்கு அதிகம் ஏற்புடையதல்ல.


இலங்கையில் திருவருட்பணி

இப்படிப் பார்க்கும்போதுதான் கதாப்பிரசங்கமென்கிற இவ்வருட்கலை ஒரு மரபுக்கு இதனை ஆற்றுவோரின் தனித்தன்மை, அவர்களது பாணி, உடை, தோற்றம், ஆசாரம் என்பன அவர்கள் மீது மக்கள் நன்மதிப்பை ஏற்படுத்த வழிவகுக்கிறது. இப்பின்னணியில் உடல்மொழியென்று சொல்லப்படும் body language, அவர்கள் ஆற்றுகை செய்யும்போது ஏற்படுத்தும் தாக்கமும் குறிப்பிடத்தக்கன எனலாம். கதாகாலக்ஷேபம் அல்லது கதாப்பிரசங்கம் என்ற கலை ஒரு தனி (நடிப்பு) நாடகமே என்று கொள்ளப்பட்டது. இங்கே முத்தமிழும் சந்திக்கும் வாய்ப்பு உள்ளதே இக்கலையின் மகத்துவத்துக்கும் காரணம் எனல் பிழையாகாது.

கிளைக் கதைகள், நகைச்சுவைகள் இடையிடையே விரவி வருதல் இக்கலைக்கு அவசியமானது. சாதாரண மக்களைக் கவர இவை தேவையாயிருக்கும்.

குயிலுவக் கலைஞர்கள் எனப்படும் பக்கவாத்தியக் கலைஞர்களின் பொருத்தமான, இனிய பங்களிப்பு இக்கதாப்பிரசங்கக் கலைக்கு மிக இன்றியமையாதது என்பது குறிப்பிடத்தக்கது. பிரசங்கிப்பவர் நிறைந்த புராண, இதிகாச, சமய வரலாற்றறிவு கொண்டவராக எதிர்பார்க்கப்படுவதுடன் சரளமாக, இனிய குரலில் பாடக்கூடியவராக இருத்தல் அவசியம். சாதாரண சமயச் சொற்பொழிவாளர்கள், பிரசங்கிகள் நல்ல தொனியில் தாம் கூறவரும் பொருளை எடுத்துரைப்பவர்களாக மட்டும் காணப்பட, இசைப் பிரசங்கிகளோ தம் சங்கீத ஞானத்தையும், கதாப்பிரசங்கத்திலே நல்ல முறையில் காண்பிக்க வேண்டியவர்களாகிறார்கள்.

நல்ல சமய ஞானமுள்ள பேச்சாளர்கள் பொதுவாக ஓரளவாவது இசை சேர்த்து பாடல்களை பாடித் தம் சொற்பொழிவுகளை நடத்துவார்களானால், திருமுறை, அருள் பாடல்களை கூடிய அளவு பக்தியுணர்வு சேர்த்துப் பாடும் தன்மை பெற்றிருப்பார்களானால் அவர்கள் சொல்லும் விடயங்களும் மக்கள் மனதில் இலகுவில் பதிந்துவிடும் சாத்தியம் அதிகமாகவே உள்ளது என்பது உண்மையான கருத்தும் ஆகும் என்பார் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா.



2
கதை செய்தல்

1. இலங்கையில் பிரசங்கம்

செந்நெறி இசைப் பராம்பரியம் பற்றிச் சிந்திக்கும்போது இசைச் சொற்பொழிவு எனப்படும் சங்கீத கதாப்பிரசங்கம் பெறும் முக்கியத்துவத்தை நோக்குவோம். கதாப்பிரசங்கம் என்பது தனிஒருவர் ஒரு கதையை எடுத்துரைப்பதன் மூலமும்,



மணி பாகவதர் வாத்தியக் கலைஞர்களுடன் உட்கார்ந்திருந்து கதாப்பிரசங்கம் நிகழ்த்துகின்றார்.

பாத்திரநிலைப்படுவதன் மூலமும் வசனத்தாலும், பாடல்களாலும், பக்கவாத்தியங்களின் துணையோடும் எடுத்துச் சொல்லும் மரபாகும்.

இதுவும் ஒரு வகை நாடகமே. இதில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிரூபணமானது சிறு பாடல்களாகப் பாடப்படும்.

யாழ்ப்பாண இசைப்பாரம்பரியத்தின் ஆரம்பகாலத்தில் இசை என்று சொல்லும்போது கதாப்பிரசங்கம், திருமுறைப் பண்ணிசை புராணபடனம் என்பனவற்றுக்கு அதிக மதிப்பு இருந்தது. இந்த இசைப் பராம்பரியத்தை கையாள்வதன் மூலம் சமயக்கருத்துகளை, சமூகப் பண்பாட்டு உயர்வுகளை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு இருந்தது. சுருங்கச் சொன்னால் கதை செய்தல் முறைமை என்ற இம்மரபு இதற்கு ஒரு வலிமையான ஊடகமாக விளங்கியது எனலாம்.

இந்தக் கதாப்பிரசங்க மரபானது ஆரம்பத்தில் தமிழ்நாட்டிலிருந்தே இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது. கதாப்பிரசங்கமானது ஈழத்தில் நீண்டகாலமாக வளர்ந்து வருகிறது. ஆலயங்கள், மடாலயங்கள், வித்தியாலயங்கள் போன்ற சமய விருத்தி மையங்களைத் தளமாகக் கொண்டு வளர்ச்சி பெற்று வருகின்றது.

இலங்கையில், சிறப்பாக தேசிய வானொலியிலும், தொலைக்காட்சியிலும் கதாப்பிரசங்க நிகழ்ச்சி சிறப்பு அம்சமாக இடம்பெற்று, பல்லாயிரக்கணக்கான மக்களை பக்திப் பரவசத்தில் ஈடுபடுத்தி வருகிறது. இதன் மூலம் இசை வளர்ச்சியோடு, சமய அறிவும், ஆன்மிக வளமும் பொதுமக்களிடத்தே வளர்க்கப்படுகிறது.

கதாப்பிரசங்க மூலம் கதை செய்பவர்கள் அற்புதமான பக்திரசக் கதைகள் மூலமும், புராண, இதிகாச இலக்கியச் சம்பவங்களைக் கதாரூபமாகச் செய்வதன் மூலமும் மக்களின் சமய அறிவை, பக்தியை வளர்ப்பவர்களாக மட்டுமின்றி மக்களின் பண்பாட்டையும் மேலோங்கச் செய்பவர்களாக விளங்கினார்கள்.

புராணபடனச் செல்வாக்கு

2. புராணக் கதைகளைக் கேட்டுப் பக்திப் பரவசப்படும் போக்கு

ஈழநாட்டைப் பொறுத்தவரையில் பல நூற்றாண்டுகளாகப் புராணபடனம் செய்யும் முறை கோவில்களிலும், மடங்களிலும், வீடுகளிலும் நடைபெற்று வருகிறது. இம்முறை தமிழ்நாட்டிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டதா அல்லது இந்த நாட்டுக்கே தனித்துவமுடையதா என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. 17ஆம் நூற்றாண்டில் ஈழநாட்டின் வட பகுதியை ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்தியின் அரசியல் பின்னணி காரணமாக வடமொழிச் செல்வாக்கையும், பிராமணீயச் செல்வாக்கையும் ஈழநாடு பெற்றது. இதன் விளைவாகவே இம்மன்னர்களின் ஆதரவில் ஈழத்திலே புராணபடனமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது. அரச அவைகளிலே சூதர்கள் எனப்படும் பௌராணிகர்களால் நிகழ்த்திக்காட்டப்பட்ட முறைமை கதாகாலட்சேப முறைமைக்கு பங்களிப்புச் செய்ததென்பதோடு, இப்புராணபடன முறைமையின் வளர்ச்சியும் தொடர்ச்சியும் கதாப்பிரசங்க மரபு வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்தமையும் மறுக்க முடியாத உண்மையாகும்.

ஈழத்திலே காணப்படும் புராணபடன முறைமையானது மூன்று வகைகளாக விளங்கியது.

1. புராணங்களைப் படித்துப் பயன் சொல்லுதல்.
2. இதிகாசங்களைப் படித்து உரை சொல்லுதல்.
3. சமயக்கதை வாசித்தல் என்பவையே அவையாகும்.

பொதுவாக, புராணபடனம் செய்யும் நூல்களுக்குள்ளே கந்தபுராணமே புராணப் படிப்புக்குரிய நூலாகச் செல்வாக்குப் பெற்றிருந்தது.

மேலும், பயன் சொல்லல் முறைக்குக் கந்தபுராணத்தோடு, பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர்ப் புராணம், சிவராத்திரி புராணம், விநாயக புராணம் முதலான நூல்களும் முதன்மை பெற்றவையாக உள்ளன.

ஒருவர் வாசிக்க, மற்றொருவர் பயன் சொல்லும் முறையானது ஈழநாட்டிற்கே, குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கே உரிய சிறப்பு முறைமையாகும் என்பது ஆன்றோர் கருத்தாகும். கோவில்களில் சந்நிதானத்தின் வலது பக்கத்தில் வடக்கு முகமாக இருந்து ஒருவர் பாட்டை வாசிக்க, மற்றவர் கிழக்கு முகமாக இருந்து பொருள் சொல்வார். படிப்புத் தொடங்குவதற்கு முன்னர் புத்தகபூசை இடம் பெறும். பீடத்திலே வைத்து கற்பூரவொளி பிரகாசித்திருக்க மரபுநெறிக்கமைய ஆலய அந்தணர் காப்புச் செய்யுட்களைப் படித்துப் புராணபடனத்தினை ஆரம்பித்து வைத்தல் இவ்வரன்முறையின் சிறப்பு விதியாகும். தோடி, காம்போதி, பைரவி இராகங்களிலே பாடல்களை இசைத்து ஆரம்பிக்க வேண்டுமென்பதும், பாடல் இசைக்கப்படும் இராகத்தை அனுசரித்தே பயன்சொல்லுபவரும் ஆலாபனை செய்து பொருள் உரைக்கும் முறைமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு புராணபடன முறை பல்வேறு நியதிகளை உடையதாய் அமைந்தது.

புராண இதிகாசக் கதைகளை, சமய, சமூக வரலாறுகளை இசை ஊடகங்களோடு கேட்டு அனுபவித்தல், கதாப்பிரசங்க மூலம் மக்களை எட்டியது.

ஈழத்தில் இலக்கியப் பாரம்பரியம் மீள்கண்டுபிடிப்புச் செய்யப்பட்ட அளவுக்கு, இசைப் பாரம்பரியம் இன்னும் பூரணமாக மீள்கண்டுபிடிப்புச் செய்யப்படவில்லை. ஆனால் இசைத்துறைக்கு எம்மிடையே மிகச் செழுமையான ஒரு பாரம் பரியம் உள்ளது. நம் நாட்டின் இசைக்கு ஒரு வரலாறு உள்ளது. செந்நெறி இசை மரபுகள் கால வெள்ளத்தால் அழிவுறாதவை.

பண்டை நாள் வரலாற்றினை ஆராயும்போது செம்மொழியான நந்தமிழ்மொழியானது இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்களைக் கொண்டு விளங்கியமையை அறியலாம். இயல், இசையின்றி சோபிக்காது. இயலும் இசையும் இன்றி நாடகம் சிறக்காது. எனவே இசையானது எல்லாக் கலைகளுக்குமே முதன்மையானது.

"நாடிப்புலங்கள் உழுவார் கரமும் - நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர்நாவும் - செழுங்கருணை
ஓடிப்பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக்களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே"

என்ற கலைமகள் துதிப்பாடலிலே முத்தமிழ்த் தெய்வமாகிய அன்னை இயலிசை நாடகக் கலைகளால் உவப்புறுகிறாள் என அறிகிறோம்.

3. இசைக்கு முக்கியத்துவம்

இசை என்பது இனிய உணர்வு தரும் ஓசைத் தொகுதிகளை ஓர் ஒழுங்குமுறையில் வெளிப்படுத்தல் ஆகும்.

இறைவன், இசை, மனித வாழ்க்கை என்ற மூன்றையும் பிரித்துத் தனித்தனியாகப் பேசமுடியாது. மனிதனானவன் எப்பொழுது தோன்றினான் எனக் கூறுவது எத்துணை கடினமானதோ அத்துணை கடினமானது இசையின் தோற்றம் பற்றிப் பேசுவது.

ஹேபாட் ஸ்பென்ஸர் என்ற தத்துவ அறிஞர் இசையே நுண்கலைகளிலெல்லாம் முதன்மையானது – "Music is the finest of the finearts" – என்கிறார். அரிஸ்டோட்டில் என்ற கிரேக்க தத்துவ அறிஞர் "இசை என்பது நல்லொழுக்கத்தின் பிரதிபலிப்பு" – "Music is a direct reflection of moral character" எனக் குறிப்பிடுவார். அது களங்கமற்றவர்களின் மொழியாகும் என்ற கருத்தையே கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய

இசையானது "நாததநு மலிகம் சங்கரம் நமாமி" என தியாகராஜ சுவாமிகளால் விதந்து பாடப்பட்டது.

இசைக்கு மூலவேராக பாமரரால் பாடப்பட்ட கிராமிய, நாட்டார் இசையே காணப்பட்டாலும், முதலிலே சமய அடிப்படையிலேயே இசையானது உலகிலே தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளது. அதாவது, பக்தியை அடிப்படையாகக் கொண்டே இசைத்துறை வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது என்பது எல்லா சமூகத்தினரிடையேயும் இன்றும் நிலவிவரும் உண்மையுமாகும்.

இறைவனை நம்மோடு, ஆன்மாவோடு இசைய வைப்பதற்கு முதற்படியாக இசைபட வாழ்தல், இசைந்து வாழ்தல் ஆகிய பண்புகளை மனிதனிடத்தே தோற்றுவிக்கவல்ல மார்க்கம் இசை ஆகும். இசை மனிதனின் ஆன்ம ஈடேற்றத்துக்கு உறுதுணையானது. எனவேதான் தமிழினம் உலகை ஆண்டு, அருள் பாலிக்கும் கடவுளை இசை வடிவினனாகக் கண்டு ஏத்தியும், போற்றியும் வந்திருக்கிறது. சைவ, வைணவம் போற்றும் கடவுளரெல்லாம் இசைப்பிரியர்களாக, இசை வடிவினராகக் காணப்படுகின்றனர். ஏழிசையாய், இசையின் பயனாய் இறைவனைக் கண்ட சுந்தரரைப்போல, ஓசை ஒலியெலாம் ஆனவனாக நாவுக்கரசரும் ஏத்த, பின்வந்த அருணகிரிப் பெருமான் "நாத விந்து கலாதீ நமோ நம" என்று ஏத்துவதையும் காணலாம்.

பொதுவாக, மனிதர்தம் பண்பாட்டில் ஒரு முக்கியமான அலகாக இசையின் வரலாறு அமைந்திருக்கிறது. இசை, நந்தமது இலக்கிய மரபில் பேணப்பட்டு, சாத்திரிய ரீதியான இசையாக இன்று மலர்ந்துள்ளது.

முதலில் பாரத பூமியில் தோன்றியது எனக் கருதப்படும் கர்நாடக இசை உலகில் அனைத்து இசை மரபுகளிலும் பழமையானது, முன்னையது என்ற பெருமைக்குரியதாகும். வேதகால இசை மரபின் சிறப்பை அக்காலத்திலேயே ஐந்து ஸ்வரங்களைக் கொண்டிருந்த சாம வேதத்தில் காணமுடிகிறது.

வைதீக கானம், லௌகிக கானம் என்பவையிரண்டும் அக்காலத்திலேயே இருந்திருக்கின்றன. மிடற்றிசையோடு, கருவிகளைக் கையாண்டு இசையெழுப்பும் திறன் அக்காலத்திலேயே மேம்பட்டிருந்தது. தோல், துளை, நரம்பு ஆகியவற்றால் ஆக்கப்பட்ட வாத்தியங்கள் மிடற்றிசைக்கு உதவின.

இசையாடலால் அமைதிபெறும் உள்ளத்துக்கும் உடலுக்கும் யோகசாதனையாக இது அமைகிறது என உபநிடங்கள் கூறுகின்றன.

இயற்கை நயத்தோடும் இயற்கை உணர்வோடும் கூடிய ஏழிசையிலிருந்தே "பண்கள்" தோற்றம் பெற்றன.

தமிழ்ப் பண்ணிசை மரபு

தொன்மையில் தமிழர்களிடையே இருந்த "பண்" இசை முறையே இராகம் என வந்துள்ளது.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற தமிழ்ப்பெயர்களே ஸரிகமபதநி என்ற ஏழு ஸ்வரங்களுக்கு உரிய பெயர்களாகும்.

சமயக் குரவர்களுக்கு முந்தியவராய் வாழ்ந்து, பக்தி இயக்கத்தின் வழிகாட்டியாயிருந்த காரைக்காலம்மை என்ற பெண் அடியார் கி.பி. ஆறாம் நூற்றாண்டுகளில் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் மூலமும் இந்தச் செய்தியை நாம் அறியமுடியும். ஏழு ஸ்வரங்களையும் தமிழர் தம் வாத்தியங்களையும் குறிப்பிடும் அப்பாடல் பின்வருமாறு:

துத்தம் கைக்கிளை விளரி தாரம் உழை இளி ஓசை பண்
கொழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையொடு தகுவிதம் துந்துபிதாளம்

வீணை மத்தளம் கரடிகை வன்கை மென்றோல் தமருகம்
குட முழா மொந்தை விச்சித்
தத்தனை விரவினோடாடும் எங்கள் அப்பன் இடந்தரு
ஆலங்காடே"

என்பது அப்பாடல்.

இந்த வகையில் பழமைபெற்ற நம் மரபு வளர்ச்சியை பல்லவர் காலம், காப்பிய காலம், சோழப் பெருமன்னர் காலம், நாயக்கர் காலங்களிலும் காணமுடியும். அருணகிரிநாதர் காலத்தில் இசை சிறப்புக் கண்டது. 16ஆம் நூற்றாண்டளவில் கீர்த்தனைகளும், பதங்களும் தோன்றின.

சீர்காழி அருணாசலக் கவிராயர் (1711 – 1779) முதன்முதலாக பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பைக் கொண்ட கிருதிகளைச் செய்தவராகக் காணப் படுகிறார். நாயக்கச் சிற்றரசர்கள் காலத்தில் தெலுங்குப் பாடல்களே அதிக செல்வாக்குடனிருந்தன.

கர்நாடக இசையின் பங்கு

கர்நாடக இசையின் பொற்காலம் எனக் கூறப்படும் சங்கீத மும்மூர்த்திகளின் காலத்தில் இசைக்கலை உத்வேகம் பெற்று வளர்ந்தது.

முத்து ஸ்வாமி தீட்க்ஷிதர்
சியாமா சாஸ்திரிகள்
தியாகராஜ சுவாமிகள்

ஆகிய மும்மூர்த்திகள் பக்தியோடிணைந்த இசைப்பாடல்களால் உலகைக் கவர்ந்தவர்களாவர். இவர்கள் பணியால்தான் கீதம், வர்ணம், ஜதீஸ்வரம், ஸ்வரஜதி, கிருதி, கீர்த்தனை என்பனவும் ஜாவளி, திவ்ய நாமக் கீர்த்தனை, ஊஞ்சல், எச்சசீரிக்கை, உபசாரம் போன்ற பாடல் வகைகளும் உருவாகி இசைத்துறைக்கு மெருகூட்டின.

பக்திரசத்தோடு இரண்டறக்கலந்த கர்நாடக இசை மரபானது, என்றென்றும் சம்பிரதாயபூர்வமான பாணியைக் காப்பாற்றி வருவதே அதன் சிறப்பியல்பாகக் கொண்டிருந்தது.

இந்த வகையிலே கர்நாடக இசையானது பண் இசையை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது என்பதை தமிழிசைப் பாரம்பரியத்தை நுணுகி ஆராய்வோர் அறிவர். தேவாரங்கள் சிறப்பாகவும், ஏனைய திருமுறைப் பாடல்கள், அருட்பாடல்கள் என்பனவும் பண்ணடைவு பெற்றே ஆக்கப் பெற்றன. ஓதப்பெற்றன. இசைப் பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள் பல இசை ஆராய்ச்சிகளைச் செய்தவர். அவர் வருகையும் நம் இசைத்துறை வளர்ச்சிக்குப் புதிய பங்களிப்பை வழங்கியது எனலாம்.

இசைத்தமிழ் நூலாகிய "பஞ்சமரபு" பண் என்ற பதத்திற்குத் தரும் விளக்கம் நோக்கத்தக்கது.

பண் பாடப்படுவதற்கு தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அன்னம் ஆகிய 8 இடங்களாலும் முறையே எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்ற எண்வகை முயற்சியாலும் பண்ணப்படுவது "பண்" எனப்படுவதாக ஒரு பாடல் விளம்புகிறது.

இந்த வகையிலே செந்நெறி இசை மரபுகள் கால வெள்ளத்தால் சிதைவுறாத வகையில் அவற்றின் தரத்தையும், பெருமையையும் பேணிக்காப்பதில், செந்நெறி இசைப் பாரம்பரியம் ஆற்றிய பங்களிப்பைப் பார்க்கும்போதுதான் நாதஸ்வரம், தவில் போன்ற மங்கள இசையோடு, பண்ணிசை கதாப்பிரசங்கம் என்னும் கதை செய்தல், புராணபடனம், கர்நாடக வாய்பாட்டிசை, வாத்திய சங்கீதங்கள் என்பன முக்கியம் பெறுகின்றன.

இந்தியத் தொல்சீர் இசை மரபை அடிப்படையாகக் கொண்டு ஈழத்தமிழ் மக்களிடையேயும் கர்நாடக இசை மரபு

வளர்ச்சி பெறலாயிற்று. முக்கியமாக இந்து மதத்தைச் சார்ந்த தமிழ் மக்கள் மத்தியிலே பெரு வரவேற்போடு ஆதரித்து, பேணி வளர்க்கப்பட்டது. நம் இசை மரபு பிடாரர்கள் (ஓதுவார்கள்) அரையர் சீடபரம்பரை வாயிலாக இக்கலையானது காலத்துக்குக் காலம் கையளிக்கப்பட்டு வந்திருக்கிறது. கோவில்களிலே பக்தித் திருமுறைகள் பண்ணோடு ஓதப்படுவது மாத்திரமின்றி பண்ணார்ந்த இசைப்பாடல்களும் முறையாகப் போற்றப்பட்டன. சோழர் காலம் இசைத்துறைக்கு முன்னுரிமை கொடுத்தது. முக்கியமாக, அக்காலங்களிலேயே தமிழர் மத்தியில் சாஸ்திரிய இசை மரபுகளில் பண்ணிசையோடு யாழும் நாதஸ்வரம், தவில் என்பனவும் சிறப்பிடம் பெற்றிருந்தன. போத்துக்கேயர் காலம் ஒல்லாந்தர் ஆட்சி நடைபெற்ற காலங்களில் தமிழிசைக்கு சில இடையூறுகள் வந்திருந்தன. எனினும் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேய (1796) பிரித்தானியார் காலத்தில் இப்பாதிப்புகள் குறைவடையத் தொடங்கின. இயலும் இசையும் நாடகமும் புத்துயிர் பெறத் தொடங்கின.

7. நாவலர் பணியும் எதிர்பார்ப்பும்

கோவில்களைத் தளமாகக் கொண்டு இசைக்கலை உள்ளிட்ட பிற கலைகளும் பேணி வளர்க்கப்படலாயின.

சைவசமயத்தின் காவலராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் காலம் இசைக்கலையைப் பொறுத்த அளவில் மிக முக்கியமான காலமாகும். எனினும் இக்கலைகளின் புனிதத்துவம் பற்றி மக்கள் கரிசனமாக இருக்க வேண்டும் என்பதில் அவர் முனைப்பாயிருந்தமை இங்கு நோக்கத்தக்கது. அதாவது கி.பி. 600 முதல் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு கோவிற் பண்பாட்டை நாவலரவர்கள் நிராகரிப்பவராகவும் காணப்படு கிறார். பண்ணிசை கூட்டி இசை பாடுவதையும், திருமுறைகள் மூலம் ஆலயங்களில் இசைத்தொண்டை விஸ்தரிப்பதிலும் முனைப்புக் கூட்டி தமிழிசை மரபுக்கே வித்திட்டவர் என சுத்தானந்த பாரதியாரால் சுட்டப்படும் நாவலர் பெருமான்

அப்போது கோவில்களில் நடந்துவந்த தாசியர் நடனம், சங்கீதம், வான விளையாட்டு, கேளிக்கைக் கலைகளை ஒழித்து விடுங்கள் என்று விஞ்ஞாபம் வெளியிட்டார். மாறாக சைவப்பிரசங்கம், வேதபாராயணம், தேவார திருவாசக பாராயணம் முதலியவற்றைச் செய்யுங்கள் என வேண்டிக் கொண்டார் – (ஆதாரம்: ஈழத்து இசைநாடக வரலாறு – பேராசிரியர் கா.சிவத்தம்பி) தேவதாசிகள் எனப்பட்ட நடனமாதர்கள் கோவில்களில் ஆடிய நடனங்கள், பக்தியுணர்வைத் திசை திருப்புமென நாவலர் கருதியதையே இது காட்டுகிறது என்று கூறும் அவர் கோவில்களில் சைவப்பிரசங்கங்கள் பெறவேண்டிய முக்கியத்துவம் பற்றியும், தேவார திருவாசக பாராயணம், புராண படனம் போன்ற இசை மரபுகள் போற்றப்பட வேண்டிய அவசியம் பற்றியும் உன்னதமாகக் குறிப்பிடுவார். இக்கருத்து அவர் வாழ்ந்த காலத்தில் சங்கீதம், நடனம் பயில விரும்பிய உயர் சமூக மட்டத்து மக்களின் மனநிலையைப் பாதிக்கவே செய்தது. கோவில்களில் கூத்து, நாடகம் நடத்தப்படுவதையும், இரவிரவாக நித்திரை விழித்து இக்கலையை ரசிக்க ஏங்கும் ஒரு கூட்டத்தையும் நாவலர் பெருமான் சாடினார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சமய உபன்யாசங்கள் இடம்பெற வேண்டும் என்பது பற்றியும் வலியுறுத்தியுள்ளார். ஐரோப்பிய பாதிரிமார்கள் தமது கிறிஸ்தவ பிரசாரத்திற்குப் பயன்படுத்திய பிரசங்க முறைமையை சைவக் கோவில்களில் இசையோடு பாடியும் பேசியும் பக்தி மயமாக ஆரம்பித்த நாவலரே சைவ பிரசங்க முறைமை ஸ்தாபகர். இம்மரபே கதாப்பிரசங்கம் என்ற கலைவடிவத்தின் உருவாக்கத்திற்கு வழியமைத்த முதற்காரணி என்றால் பிழையாகாது.



பார்வை:

இசைப் பாரம்பரிய வளர்ச்சியில் கதாப்பிரசங்கம்

- எனது அனுபவத்தோடு

கதாப்பிரசங்கம் - ஒரு சமயப்பணி மட்டுமல்ல
இங்கிதமான ஒரு லலித கலையும்தான்.

இசைக்கதாப்பிரசங்க மரபையே இங்கையில் அறிமுகம் செய்த சங்கரசுப்பையர் குப்பிழான் கணேசய்யர் வழிவந்த "மணிபகவதர்" ஆகியோர் ஆரம்பித்த உடுவை ஸ்ரீகந்தசாமி ஞானபைரவர் தேவஸ்தானம்தான் என்னையும் உயர்வித்த இடம். என் பிறந்தகமான கொக்குவில் குப்பிழான் செல்லத்துரை, த.குமாரசாமிப்பிள்ளை ஆகியோரிடத்தில் இக்கலை நுட்பங்களைப் பயிலக்கூடிய வாய்ப்புப் பெற்றவன். அவ்வருட்கலையை ஆராதிப்பவன். இற்றைவரை காலத்தின் போக்குக்கு ஏற்பவும், கதாகாலட்சேப மரபுக்கு ஊறுவிளை விக்காதவகையிலும் அழைத்துச்செல்ல என்னுள்ளம் விரும்பியது.

என் தந்தையார் கொக்குவில் எம்.எஸ் என்றளவில் இலங்கையின் வடபுலத்தில் மாத்திரமின்றி ஈழத்தில் தழிழறிந்தோர்மட்டிலும் பிரபலமான தமிழ், சைவப் புலமைபெற்ற அறிஞராக இந்தியாவிலும் புகழ்பெற்ற அவர் எம்.எஸ். சுப்புலட்சுமி